இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டம்

*[1986, ஒக்ரோபர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1986, ஒக்ரோபர் மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் **வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.***

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

***விலை : சதம் 45*** ***தபாற் செலவு : சதம் 75***

## 1986 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டம்

[1986 ஒக்ரோபர் 29 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.ஓ—43/86

**தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1986 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

2. தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட் பந்தியில் " எவரேனும் ஆளைக் குற்றவாளியாகக் கண்டு, சனாதிபதிக்கு அறிக்கை செய்யுமிடத்து " என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

தேசிய அரசுப் பாவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

" எவரேனும் ஆளைக் குற்றவாளியாகக் கண்டு அல்லது இலங்கை அரசாங்கம், சனாதிபதி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதனது அல்லது அவரது சட்டமுறையான தத்துவங்களைப் பிரயோகிக்க அல்லது பிரயோகிக்காதுவிட இலங்கை அரசாங்கத்தை, சனாதிபதியை அல்லது பாராளுமன்றத்தின் அத்தகைய உறுப்பினரைத் தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் கருத்துடன் ஆளெவரையும் எம்முறையிலேனும் பயமுறுத்திப் பணியவைத்திருக்கும், தம் செல்வாக்கிற்குட்படுத்தியிருக்கும், அல்லது வலிந்து நெருங்கியிருக்கும் அல்லது பயமுறுத்திப் பணியவைக்க அல்லது செல்வாக்குக்குட்படுத்த அல்லது வலிந்து நெருங்க முன்னேற்பாடு செய்யும், சதிசெய்யும் அல்லது எத்தனிக்கும் ஆள் எவரும் பற்றி சனாதிபதிக்கு அறிக்கை செய்யுமிடத்து ".

ஐ 093081—2,815 (10/86)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.